# நீண்ட நெடிய பொது வாழ்வுக்குச் சொந்தக்காரர் கலைஞர்!

என்னுடைய இனிய நண்பர் கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டு துவங்கியிருப்பதையொட்டி அவரால் துவக்கப்பட்ட முரசொலி ஏடு சிறப்பு மலர் வெளிக்கொணர்வது அறிந்து பெருமகிழ்ச்சிக் கொள்கிறேன்.

நீண்ட நெடிய பொது வாழ்வுக்கு சொந்தக்காரரான அவரோடு பல்வேறு தருணங்களில் இணைந்து பணியாற்றியுள்ளேன். சட்டமன்றத்திலும் இணைந்து பணியாற்றக்கூடிய வாய்ப்பு கிடைத்தது.

என்னுடைய ஒவ்வொரு பிறந்த நாளின் போதும் அவர் வாழ்த்து தெரிவிப்பார்.

சென்னையில் நடைபெற்ற கலைஞர் அவர்களின் 60 ஆவது பிறந்த நாள் விழாவில் ஜெகஜீவன் ராம் கலந்து கொண்ட கூட்டத்தில் நான் பங்கேற்று உள்ளேன். கன்னியாகுமரியில் நடைபெற்ற திருவள்ளுவர் சிலை திறப்பு விழா உள்ளிட்ட பல்வேறு விழாக்களில் அவரோடு பங்கேற்று பேசியுள்ளேன். 1997 ஆம் ஆண்டு மதுரையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தீண்டாமை ஒழிப்பு மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் தி.மு.க. தலைவர் கலைஞரும் பங்கேற்று பேசினார்.

மாக்சிம் கார்க்கி அவர்கள் எழுதிய தாய் நாவல் கலைஞர் அவர்களுக்கு மிகவும் பிடித்தமான ஒன்று. அந்த நாவலை அவர் கவிதை வடிவில் எழுதியபோது, அதற்கு என்னிடம் முன்னுரை கேட்டு வாங்கி நூலில் இணைத்தார். மாமேதைகள் மார்க்ஸ், லெனின், பிடல் காஸ்ட்ரோ, சேகுவேரா போன்ற பொதுவுடமை இயக்கத் தலைவர்கள் குறித்து கவிதைகள் எழுதி சிறப்பித்துள்ளார்.

அவர் ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது, பெண்களுக்கு சொத்துரிமை வழங்கியது, உள்ளாட்சிகளில் பெண்களுக்கு 50 சதவீத இடஒதுக்கீடு, பெரியார் சமத்துவபுரம் போன்ற பல்வேறு நல்ல திட்டங்களை செயல்படுத்தி உள்ளார்.

அருந்ததிய மக்களுக்கு உள்ஒதுக்கீடு வழங்க



வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை விடுத்த போது, அதுகுறித்து ஆராய குழு அமைத்து அருந்ததிய மக்களுக்கு உள்ஒதுக்கீடு வழங்கியது மிகவும் பாராட்டத்தக்க ஒன்றாகும்.

தி.மு.க. தலைவராகவும் தமிழ்நாடு முதல்வராகவும் பணியாற்றிய அவர், பன்முகத் திறமைகள் கொண்டவர். இலக்கியம், திரைப்படம், நாடகம் என அவர் ஈடுபட்ட அனைத்துத்துறைகளிலும் முத்திரைப்பதித்தவர்.

இந்தி மொழித் திணிப்புக்கு எதிரான போராட்டத்தில் மாணவப் பருவத்திலேயே கலைஞரும் பங்கேற்றார். மதுரை அமெரிக்கன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த நானும் பங்கேற்றேன். இன்றைக்கு இந்தி மற்றும் சமஸ்கிருத திணிப்பு மீண்டும் பா.ஜ.க. ஆட்சியில் மும்முரமாகி உள்ள நிலையில், ‘செப்பு மொழி பதினெட்டுடையாள்; எனினும் சிந்தனை ஒன்றுடையாள்’ என்ற மகாகவி பாரதியாரின் வாக்கிற்கிணங்க மொழிகளின் சமத்துவம் நிலைநிறுத்தப்பட வேண்டும். ஒன்றிய ஆட்சி மொழிகளில் ஒன்றாக, தமிழ் உள்ளிட்ட அனைத்து மொழிகளும் மாற்றப்பட வேண்டும். எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்பது தமிழ்நாட்டில் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இன்றைக்கு மதவெறி சக்திகள் இந்தியாவின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் சீர்குலைக்க முயல்கின்றன. எதிர்வரும் 2024 தேர்தலில் ஒன்றிய ஆட்சி அதிகாரத்திலிருந்து பா.ஜ.க. கூட்டணி அகற்றப்படுவது அவசியமாகும். அதற்கான பணிகளில் தி.மு.க. தலைவரும் தமிழ்நாட்டின் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் அனைத்து மதச்சார்பற்ற கட்சிகளுடன் இணைந்து நிற்பது வரவேற்கத்தக்க ஒன்று.

**என். சங்கரய்யா**
மூத்த தலைவர்,
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய மாநாடு கண்ணூரில் நடைபெற்ற போது, மாநில சுயாட்சி தொடர்பான கருத்தரங்கில் பங்கேற்று மாநில உரிமைகளை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். நாகர்கோவிலில் நடைபெற்ற தோள் சீலைப் போராட்டத்தின் 200 ஆவது ஆண்டு, வைக்கத்தில் நடைபெற்ற வைக்கம் போராட்டத்தின் 100 ஆவது ஆண்டு ஆகியவற்றில் கேரள முதல்வர் தோழர் பினராயி விஜயனும், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினும் இணைந்து பங்கேற்று சமூக நீதி கருத்துக்களை முன்வைத்தது சிறப்பானது.

இந்தியாவின் அரசியல் சட்டத்திற்கே ஆபத்து ஏற்பட்டுள்ள நிலையில், ஜனநாயகம், மதச்சார்பின்மை, கூட்டாட்சி, பன்முகத்தன்மை போன்றவற்றை பாதுகாக்க அனைத்து மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகளும் இணைந்து பணியாற்ற வேண்டியுள்ளது. அந்தப் பணிக்கு ஊக்கமளிப்பதாக கலைஞரின் நூற்றாண்டு விழா அமையும் என நம்புகிறேன். ●

# சமூக நீதியின் அடையாளம் கலைஞர்!

தமிழ்நாட்டில் சக்திவாய்ந்த அரசியல் சக்தியாக உருவெடுத்த திராவிட முன்னேற்றக் கழகம் உருவாவதில் முக்கிய பங்காற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். இவர் ஐந்து முறை மாநிலத்தின் முதலமைச்சராக பணியாற்றிய போது, இலவசக் கல்வி மற்றும் சுகாதாரம், ஜமீன்தாரி முறையை ஒழித்தல், ஏழைகளுக்கு உணவு வழங்குவதற்கான பொது விநியோக முறையை நிறுவுதல் உள்ளிட்ட பல முற்போக்கான கொள்கைகளை நிறுவியவர்.


மனிதர்களை மனிதனே இழுத்துச் செல்லும் வகையிலான கை ரிக்சாக்கள் இருந்தபோது, மனிதனை மனிதனே மாடு போல இழுத்துச்செல்வது சுயமரியாதைக்கு இழுக்கு என்பதால் கை ரிக்சாக்கள் ஒழிக்கப்பட்டன. அவற்றிற்குப் பதிலாக சைக்கிள் ரிக்சாக்கள் வழங்கப்பட்டது கலைஞரின் ஆட்சிக்காலத்தில் தான்.

குடிசைகளில் வாழ்வோருக்கு நிரந்தர வீடுகள் கட்டித் தருவதற்காக குடிசை மாற்று வாரியம் என்ற அமைப்பை தொடங்கி, அதன் மூலம் பெருநகரங்களில் குடிசைகள் அகற்றப்பட்டு, அங்கு வாழும் மக்களுக்கு அடுக்குமாடி வீடுகள் கட்டித் தந்ததும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் தான்.

சுதந்திர தினம், குடியரசு தினம் ஆகிய நாட்களில் மாநில ஆளுநர்களே தேசியக் கொடியை ஏற்றும் உரிமையுடையவர்களாக இருந்தனர். தேசிய அளவில், சுதந்திர தினத்தில் பிரதமரும், குடியரசு தினத்தில் குடியரசுத்தலைவர் கொடியேற்றும் உரிமையுடையவர்களாக இருக்கும்போது, மாநிலங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்குத் தலைமை வகிக்கும் முதல்வர்களுக்கு கொடி ஏற்றும் உரிமை வழங்கப்பட வேண்டும் என்று குரல் கொடுத்தவர் கலைஞர்.

இதனால், 1972 ஆம் ஆண்டு சுதந்திரத்தின் வெள்ளி விழாவையொட்டி, இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் சுதந்திர தினத்தில் அந்தந்த மாநில முதல்வர்கள், தலைமைச் செயலகத்தில் கொடியேற்றுவதற்கு ஒன்றிய அரசு அனுமதி அளித்தது. இந்த உரிமையைப் பெற்றுத் தந்தவர் கலைஞர்.

அரசு நிகழ்ச்சிகளின் தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்து, பார்வையற்றோருக்கு அறுவை சிகிச்சை செய்து கண்ணாடிகள் வழங்கும் கண்ணொளி திட்டம், பிச்சைக்காரர்கள் மற்றும் தொழுநோயாளிகளின் மறுவாழ்வுக்காக இரவலர் இல்லங்கள் அமைத்தது, இந்தியாவிலேயே முதன்முறையாக கோவையில் வேளாண் பல்கலைக்கழகம், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினருக்கென தனி அமைச்சரவை, நில உச்சவரம்பு சட்டம், விவசாயத் தொழிலாளர்களுக்கான கூலி நிர்ணயம், உயர் படிப்பு வரை மாணவர்களுக்கு இலவசக் கல்வி, விதவைகள்



மறுமணத்திற்கு நிதியுதவி, கலப்பு மணத் தம்பதிகளுக்கு ஊக்கத் தொகை ஆகியவை 1969 முதல் 1976 வரையிலான கலைஞர் தலைமையிலான தி.மு.க. அரசின் முற்போக்குத் தன்மை கொண்ட முக்கியமான மக்கள் நலத் திட்டங்கள் ஆகும்.

சிறு மற்றும் குறு விவசாயிகளின் பாசன வசதிக்காக மின்மோட்டார்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் 1989இல் நடைமுறைக்கு வந்தது. 1989இல் பெண்களுக்குச் சொத்தில் சமபங்கு உண்டு என்ற சட்டம் தமிழ்நாட்டில் கொண்டு வரப்பட்டது.

ஒடுக்கப்பட்ட சமுதாயத்தினர் கல்வி, வேலை வாய்ப்புகளைப் பெற்று உயர்வதற்காக தமிழ்நாட்டில் நிலவி வந்த இடஒதுக்கீட்டு அளவை 69 விழுக்காடு உயர்த்தியது கலைஞரின் அரசு. அதாவது, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 20 விழுக்காடு, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 30 விழுக்காடு, பட்டியலினத்தவர்களுக்கு 18 விழுக்காடு, பழங்குடியினருக்கு 1 விழுக்காடு என 69 விழுக்காடு இடஒதுக்கீடு 1989 முதல் நடைமுறையில் இருந்து வருகிறது. பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீட்டுடன் தமிழ்நாட்டில் உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தப்பட்டன.

1989ஆம் ஆண்டு, தர்மபுரியில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் முதன்முறையாகத் தொடங்கி வைக்கப்பட்டன. பெண்கள் ஒருங்கிணைந்து சுய தொழில் வாய்ப்பைப் பெருக்கும் இத்திட்டம் இன்று மாநிலம் முழுவதும் பெரும் வளர்ச்சி கண்டு பெண்களை தற்சார்பு கொண்டவர்களாக மாற்றியுள்ளது.

சத்துணவுடன் முட்டை வழங்கும் திட்டம், ஏழைப் பெண்களுக்கு திருமண நிதியுதவி வழங்கும் மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் தொகைத் திட்டம், அரசு நிறுவனங்களின் பணியிடங்களில் பெண்களுக்கு 30 விழுக்காடு இடஒதுக்கீடு ஆகியவை, கலைஞர் தலைமையிலான அரசில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களாகும்.

விவசாயிகள் தாங்கள் விளைவித்த பொருளை அவர்களே சந்தையில் விற்று நேரடியாகப் பலன் பெறும் வகையில் உழவர் சந்தைகளை தமிழ்நாட்டில் பெரும்பாலான பகுதிகளிலும் திறந்து வைத்தார்.


தமிழர்கள் என்ற உணர்வை மறந்து சாதிவாரியாக மக்கள் பிரிந்திருப்பதை போக்க வேண்டும் என்பதற்காக, தமிழ்நாட்டில், 100க்கும் மேற்பட்ட இடங்களில் சமத்துவபுர குடியிருப்புகளைத் திறந்து வைத்தார்.

குக்கிராம மக்கள் எளிதில் சுற்றியுள்ள நகரப் பகுதிகளை அடைவதற்கு வசதியாக தனியார் மூலம் சிற்றுந்துகள், மினி பேருந்துகள் இயக்கும் திட்டத்தை கலைஞரின் அரசு நடைமுறைப்படுத்தியது.

பள்ளி மாணவர்கள் தங்கள் கல்விக்காகப் பயணம் செய்வது சுமையாக இருக்கக்கூடாது என இலவச பேருந்து அட்டை வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டில் தான் இப்படி முதல் முறையாக இலவச பேருந்து அட்டை திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. பல கிராமப்புற ஏழை மாணவர்கள் இதனால் கல்வி பயின்று இன்று, நல்ல நிலைக்கு வந்துள்ளனர்.

2006 மே 13ம் நாள் பதவியேற்பு விழா நடந்த மேடையில் வைத்தே, தனது தேர்தல் வாக்குறுதிப்படி 1 கிலோ அரிசி 2 ரூபாய், விவசாயிகளின் கூட்டுறவுக்கடன் 7000 கோடி ரூபாய் தள்ளுபடி, சத்துணவுத் திட்டத்தில் வாரம் இரண்டு முட்டைகள் ஆகிய திட்டங்களை நிறைவேற்றக் கையெழுத்திட்டு நடைமுறைப்படுத்தியவர் கலைஞர்.

**தி.வேல்முருகன்** எம்.எல்.ஏ.
தலைவர்,
தமிழக வாழ்வுரிமைக் கட்சி.



தேர்தல் வாக்குறுதியின்படி, குடும்ப அட்டைகள் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் இலவசமாக வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. விறகு அடுப்பு, மண்ணெண்ணெய் அடுப்பு இவற்றைப் பயன்படுத்தும் ஏழைப் பெண்கள் படும் அவதியைத் தவிர்க்கும் விதத்தில், அவர்களுக்கு இலவச எரிவாயு இணைப்புடன் கூடிய எரிவாயு அடுப்பு வழங்கும் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

மாற்றுத் திறனாளிகளுக்கு அரசாங்கம் என்ன செய்யவேண்டும் என ஐ.நா.மன்றம் வழிகாட்டியிருப்பதை, இந்தியாவிலேயே முதன்முறையாகச் செயல்படுத்தியிருக்கும் மாநிலம் தமிழ்நாடுதான்.

அண்ணா நூற்றாண்டு தொடக்க தினமான 2008-ம் ஆண்டு செப்டம்பர் 15-ம் தேதி முதல் 1 கிலோ அரிசி 1ரூபாய் என்ற விலையில் மாதம் 20 கிலோ அரிசி நியாயவிலைக் கடைகளில் வழங்கப்படுகிறது. இதன் மூலமாக, பட்டினிச்சாவு இல்லாத மாநிலமாக தமிழ்நாடு மாறியுள்ளது.

முக்கியமாக, தமிழ்நாடு அரசியலின் மாபெரும் தலைவராகவும், சமூக நீதியின் அடையாளமாகவும் திகழ்ந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் என்பது ஒரு போதும் யாராலும் மறுக்க முடியாது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியில்,

வேளாண்மைக்கு தனி நிதிநிலை அறிக்கை முதன்முறையாக அறிமுகம்,

தமிழ் வளர்ச்சித்துறை விருதுகளுக்கு வழங்கும் விருதுத் தொகை ரூ.1 லட்சத்திலிருந்து ரூ.2 லட்சமாக உயர்வு,

முதலமைச்சரின் மாநில இளைஞர் விருதுக்கான பரிசுத்தொகை ரூ.1 லட்சமாக உயர்வு,

உலக செஸ் ஒலிம்பியாட் போட்டிகள் நடத்தியது,

கூட்டுறவு நிறுவனங்களில் 5 பவுனுக்குள் நகைக் கடன் பெற்று நிலுவையில் இருந்த ரூ.4818.88 கோடி தள்ளுபடி,

ரூ.2755.99 கோடி-மகளிர் சுயஉதவிக்குழு கடன் தள்ளுபடி உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்.

குறிப்பாக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை கொண்டாடும் வகையில் தமிழ்நாடு அரசு சார்பில் மக்கள் பயன்பெறும் வகையில் அவரது நினைவாக கிண்டியில் ரூ.230 கோடி செலவில் 1,000 படுக்கை வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள உயர் சிறப்பு மருத்துவமனை, மதுரை புதுநத்தம் சாலையில் ரூ.120.75 கோடியில் உலகத் தரத்துக்கு இணையாக கலைஞர் நூலகம் ஆகிய திட்டங்களை செயல்படுத்தியுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும்,

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி மலர் வெளியிடும் முரசொலிக்கும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். ●